597

உ

திருச்சிற்றம்பலம்.

தச்சன் குறிச்சிமலையென்கிற மண்கொண்டான்

மலையிலெழுந்தருளிய

# ஸ்ரீ பாலதண்டாயுதபாணி மாலையும், பதிகமும்.

இஃது

ஆச்சான்பட்டியிலிருக்கும்

மகா-ா-ா-ஸ்ரீ

துரைசாமி நாட்டரையரவர்கள் குமாரன்

மகா-ா-ா-ஸ்ரீ

போர்டுஸ்கூல் எட்மாஸ்டர்

சுப்புஸாமி நாட்டரையரவர்களாலியற்றப்பட்டு

தஞ்சை

ஸ்ரீ வித்யாவிநோதினி அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பட்டது.

பிரமாதீச- ஸு தை-மீ 23உ

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
12 FEB 19
MADRAS

1914

O26:38.2N93T1C
N14
175128



உ

திருச்சிற்றம்பலம்.

தச்சன் குறிச்சிமலையென்கிற மண்கோண்டான்

மலையிலெழுந்தருளிய

# ஸ்ரீ பாலதண்டாயுதபாணி
# மாலையும், பதிகமும்.

இஃது

ஆச்சான்பட்டியிலிருக்கும்

மகா-ா-ா-ஸ்ரீ

துரைசாமி நாட்டரையரவர்கள் குமாரன்

மகா-ா-ா-ஸ்ரீ

போர்டுஸ்கூல் எட்மாஸ்டர்

சுப்புஸாமி நாட்டரையரவர்களாலியற்றப்பட்டு

தஞ்சை

ஸ்ரீ வித்யாவிநோதினி அச்சியந்திரசாலையில்,
பதிப்பிக்கப்பட்டது.

பிரமாதீச-௵ தை-௴ 23உ

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 FEB 191
MADRAS

OFFICE OF THE REGISTRAR OF B...
12 FEB 1914
MADRAS.



உ

திருச்சிற்றம்பலம்.

அயோத்திப்பட்டி.

# சாற்றுக்கவிகள்.

மகா-ா-ா-ஸ்ரீ

குமாரசாமி உபாத்தியாயரவர்களா லியற்றிய

**எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.**

புலவர்கள் வந்தடிபணியுங் குறிச்சிமலைக்கலை
புலவன் பொற்றாள்மீது
புலவர் சிகாமணி சுப்புச்சாமி புனையணிமாலைப்
பொருத்தங் கேட்டுப்
புலவர்களும் பொலன்மாலை பலபுனைந்துமென்ன
புகழ்பூண்டோமென்றார்
புலவர்களிம்மாலை தனைவேர் கிரங்கல்
லெனவே புகழ்கின்றாரே.

ஆச்சாம்பேட்டையில் வசிக்கும்

மகா-ா-ா-ஸ்ரீ

முத்துசாமித்திராணியாரவர்கள் குமாரன்

மகா-ா-ா-ஸ்ரீ சோதிட வித்வான்

தங்கையன் திராணியாரவர்களா லியற்றிய

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

மண்கொண்டான் மலைமீதி லெழுந்தருளுங்
குகப்பெருமான் மலர்த்தாள்மீது
கண்கொண்டான் றென்னுச்சை சுப்புசாமிக்
கவிஞன் கண்ணிசாத்த
எண்கொண்டான் பாமாலை யிட்டானப்பெரு
மானுமேற்றான் கண்ட
விண்கொண்டான் விண்கொண்டா னிம்மாலை
தனைக்கேட்டு வியந்தான்மாதோ.

---

பொன்விளைந்தான் பட்டியில் வசிக்கும்

மகா-ா-ா-ஸ்ரீ

சின்னுவேளாரவர்கள் குமாரன்

மகா-ா-ா-ஸ்ரீ வித்வான்

அருணசல வேளாரவர்களா லியற்றிய

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

ஆமாலை நீங்கவருள் மயன்குறிச்சியாறுமுக
அருட்கோன் மார்பிற்
பூமாலை வாடுமணி மாமாலைபொள்ளலெனப்
பொன்னுற் செய்த
மாமாலை தேய்தலுறும் மெனமதித்துப்பத்தி
யெனும்வண்ண நாராற்
பாமாலை தொடுத்தணிசுப்புச் சாமியெனு
மியற்பேர்ப் பாவல்லோனே.

# சாற்றுக்கவிகள்.

தஞ்சையைச் சார்ந்த கச்சமங்கலம்,

ஸ்ரீ-மான்.

**சோ. சிங்காரவடிவேல் வன்னியமுண்டார்**

அம்பலகாரர் அவர்களாலியற்றப்பட்டது.

வெண்பா.

குறிச்சிக் குமரகுகக்கொற்றவன் சேயீநல்
குறிச்சிக் குமரகுரு கோத்தாட்—குறிச்சிக்கு
வேள்பணி சுப்புச்சாமி வேய்ந்தன நன்மாலைதனை
தாள்பணி கீழ்புக்கிடவேதான்.

---

இஃது தஞ்சையைச்சார்ந்த வெண்டயம்பேட்டை
ஸ்ரீ தான்தோன்றி ஈசுரன் தேவஸ்தானம் மானேஜர்
மகா-ா-ா-ஸ்ரீ தி· முத்துசாமிமுதலியாரவர்களாலியற்றயது

நேரிசை வெண்பா.

சீர்தச்சமா குறிச்சிச்செவ்வேளருள் பெரவிப்
பார்மெச்சு மாலை யெனப் பாடிவிண் ணூர்மெச்சும்
நச்சுப் புச்சாமியெனும்—நாவலனே பின்னுமந்த
அச்சுப் புகவமைத் தானுய்ந்து.

---

**இஃது. திருச்சிராப்பள்ளி வரகனேரி மகாவித்வான்,**


மகா-ா-ா-ஸ்ரீ,

கச்சை வை. முத்துசாமிபிள்ளை யவர்களாலியற்றப்
பட்டது.

கட்டளைக் கலித்துறை.

செய்யார் செழுங்கழைசேர் கமுகாந்தச் சமாகுறிச்சி
நெய்யார் வடியயிலேந்தத் தன்ருளில் நெடுவணங்கு
செய்யாவினைகள் தணந்திடமாலையைச் செய்துவைத்தான்
மொய்யார் திணிச்சுப் புச்சாமி நற்கல்வி முதியவனே.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 FEB 1914
MADRAS.



உ

திருச்சிற்றம்பலம்.

தச்சங்குறிச்சிமலையென்று வழங்குகின்ற

மண்கொண்டமலைமீ தெழுந்தருளிய

# ஸ்ரீபாலதண்டாயுதபாணி சரித்திரச் சுருக்கம்.

காப்பு.

நேரிசை வெண்பா.

சீரார் குறிச்சிமலைச் செவ்வேளடி மலர்க்கு
ஏரார் சொன்மாமலர்க ளேற்றுதற்கு—நேராக
அஞ்சக்கரத்தனருள் அஞ்சக்கரமாற்கிய்
அஞ்சக்கரத் தானலர்.

அவையடக்கம்.

கற்றவர்கள் மற்றவர்கள் கற்பியார் கற்பிப்பார்
குற்றமெனவே துணிந்து கூறினேன்—நற்றவமண்
கொண்டான் மலையிற் குலவிவளர்பால
தண்டாயுதன் பதிகந்தான்.

## அறுசீரடி யாசிரிய விருத்தம்.

கங்கையங் கடல்சூழ்பூவிற் கவினல மடுக்கலையேய்ந்த
செங்கிள்ளை நாட்டின்மன்னுந் திகழ்நடு நாயகம்போற்
பொங்குதச் சங்குறிச்சிப் பொறையெனப் பெயர்பெற்றோங்குங்
கொங்கரா மண்கொண்டான் றன்மலையெனக்குவடொன்றுண்டால்

அம்மலையதனி னின்புற் றருந்தவர் சூழநண்ணுங்
கைம்மலை யளந்துகன்னங் கரத்தினாற் கிள்ளிநின்ற
செம்மலைத் தனதுபாங்கர் சேர்ந்திடப் பெற்றதென்றால்
எம்மலை யதற்குநேராய் யிசைத்திடுந்த கமைத்தம்மா. (2)

கல்லமர்ந் தருள்காங்கேயன் களித்திடு காலன்றிக்கில்
வல்லமா முனியுந்தீசி மருவிய விடும்பனோடுஞ்
செல்லுதற் கறியவெல்லை சேருதர்க் கறியவாயாற்
சொல்லுதர்க் கறியதானசுரங்கமீ தொன்றுண்டாமே. (3)

அங்குநள் ளிருளின்மாக்க ளார்வமு மிகுதியாகிச்
சங்குசே மக்கலத்தின் றன்னொலி யாருங்கேட்க
இங்கித மாகநாளு மேற்றியே போற்றிநின்று
துங்கமா யமரரியாருந் துகளற விருந்தாரன்றே. (4)

சித்திர வயிலைத்தெவ்வர் தேகமுஞ் சேதனன்ன
சித்திரத் தங்கள்பாயச் செய்துந்தொண் டுருகிமுன்ப
சித்திரத்தற் பொறுக்காச் சேவலங் கோடியோனட்ட
சித்திர தமதாய்க் காட்டத் திருவுளங்கொண்டான் மாதோ (5)

அத்திருக் குறிச்சி வாழ்வோ னயிலவன் பாதங் தன்னை
நத்தியே வணங்குஞ் சாமி நாதசெட் டியார்தன் புத்திரன்
சித்தனற் சுத்தனான சிதம்பரச் செட்டியார் தன்
சித்திரை தன்னில் வந்து நிகழ்த்திய துரைக்கலுற்றாம் (6)

இன்னுமோர் வாரந்தன்னி லெழின்மலை முகட்டினுள்ள
நன்னயச் சுரங்கந்தன்னின் நாட்டவர் கூட்டத்தோடு
மன்னியே யகழவுள்ளே வதிசயங்காண்பா யென்று
கனனல்விற் பாணியானைக் காய்ந்தவன் மகன்றான் சொல்லி (7)

அற்றம தானபின்ன ரன்புமீக் காதலோடும்
அற்றம தாகியூரார்க் கறிவித்துச் செயல்களெல்லாம்

அற்றவ னிலைமைமாறி யத்திரியெறிந்தோன் சொன்ன
அற்றம தெதிர்பார்த்தாக மகங்குழைந் திருந்தானன்றே (8)

மாலையன் றுவந்து வந்து மனமுவந் தருளு நீப
மாலையன் பணித்த வன்னாள் மருவிய குறிச்சியுள்ளார்
மாலையங் ககழச்சத்தி வடியயிற்கரத்திலேந்தி
மாலையன் னிறத்தரூப மானவிக்கிரகங் கண்டும் (9)

வரதனும் முன்னோன்பஞ்ச மாமுகச் சங்குஞ் சுத்த
விரசத நிறத்தலிங்க மிவைகளை யெடுத்திக் காலங்
கரதலப் பட்டநெல்லிக் கனியெனக்கண் டுபோற்றி
பரவசப் பட்டார் முன்னைப் பழவினை தொலைந்ததென்றே (10)

ஆடினா ரானந்தக்கூத் தகங்குழைந் துருகிவாழ்த்திப்
பாடினார் பட்டதுன்பம் பறந்ததின்றோடென் றன்பு
நீடினார் தூபதீப நிவேதனம் பதத்திற் சென்னி
சூடினார் நிலையஞ் செய்தார் தோகையா னமர்ந்தாரன்றே (11)

எங்குமிப்பு துமைகேட்டு யிம்பரின் மனிதர் யாரும்
திங்களந் திங்கள்சுக்ரன் றினத்தினி லபிஷேகங்கள்
சங்கரன் மகற்குச் செய்து சந்தோஷமாய்க் கொண்டாடி
பொங்கியே யுவகைவேவலை புக்கித்தங் குறைசொன்னாரே. (12)

சொல்விய குறைகள் கேட்டுச் சூர்ப்பகை மனமுவந்து
நல்லசேய்ப் பேறுகுன்மம் ரணங்காச முதலாம் நோய்கள்
வல்லமா முனிகள்வாதை வழுத்தொணா இமிசையெல்லாம்
எல்லிமுன் னிமமதாக்கி யாவர்க்கு மருள்செய்தாரே. (13)

கரியவன் மருகன்சால கடங்கட ரவர்கள் தங்கட்க்
கரியவன் றொண்டர் தன்னைக் கதித்திமி சித்துவீக்கக்
கரியவன் மடங்கல் சுற்றக் காய்ந்துவஞ் சலித்துக்காணக்
கரியவன் பதத்திற் கூட்டுங் கலாபியன் றனைப்பூசித்தார். (14)

மாழையன் தனக்குநேர்ந்த வல்வினை யாவு நீக்கி
யூழையுந் தொலைத்துக்கோளை யொதுக்கியே கிருபைநோக்காற்
கூழையுங் கொடுத்துமுத்தி கொடுப்பவ னனந்தன்மைந்தன்
யேழையைக் கார்க்கவிங்கு வெழுந்தரு ளினனென்றேத்தி. (15)

மாவடிக் கமலந்தன்னை மகரமீன் பூசம் முத்திரம்
மேவடி யார்கள்பாலும் விரும்புனற் குளத்தனேகங்
காவடி கொண்டு வந்து காங்கேயற் கபிஷேபித்து
சேவடி தனைப்பூசித்துச் சிரக்கம்பஞ்செய்தாரன்றே (16)

குன்றிரவெறிந்தோனேங்கற் குகையுதித் தாறே மூண்டாம்
அன்றுதொட் டனேகமான வற்புதக் காக்ஷி யெல்லாம்
யின்றய வரைக்குங் காட்டி யிகத்தடி யவரைக் காக்க
மன்றவன் மகனனந்த மாகியே யிருந்தாரன்றே (17)

அந்தவூர் தன்னின் மன்னி யலமரு ளகலப்பாவச்
சிந்தனை முழுது நீக்கிச் சிவசமை யத்தையுன்னி
யெந்தனிப் பிறவிநீக்க வென்செய்வே னென்க்கல் மேவுங்
கந்தனை வழிபட்டால் நற்கருணை செய்வா ரென்றெண்ணி (18)

வனசரர் குலத்தில் வந்தோன் வமிசத்தின் செயலை நீக்கி
மனதுரை காயமொன்றி வைகலும் வேளையுன்னி
எனதுடல் பொருளுமாவி யாவதும் நினதே யென்று
னினம்புளிப் பழத்தான்வையா புரியெனு மியற்பேருள்ளான். ()

என்றுரைத் திருக்கின்றான்ற னெண்ணத்தைப் பரிசோதிக்க
வென்றெண்ண யானையுண்ட விளங்கனி யெனவே செல்வங்
குன்றியே தூரிமீன் போற் குழம்பியெப் படிநாமுய்வோ
மென்றெண்ணி மயங்கியேங்கி வேதனை யடைந்தான்பின்னும். ()

சத்தியின் புதல்வனேக்காற் சஞ்சல வலையிற் சிக்கி
நித்திய தரித்திரத்தி னேர்பட்டுப் பசிதான் வந்து
பத்தியே தூரத்தமுன்னுட்ப் பட்டினியிருந்து பின்னாள்
பித்தனாய் நடைதளர்ந்து போயினான் மலையின்றென்பால். (21)

கானிடைப் புகுந்துவேள் வாழ் கல்லகந் தன்னைநோக்கி
மீனவன் மகனேயுன்றன் விளையாட்டா வெனக்கும் பிட்டு
தேனதை யெடுத்து விற்றுச் சீவனஞ் செய்தர்க்கெண்ணிப்
போனவன் மூர்ச்சையாகிப் பொருப்பதின் வடபால் வீழ்ந்தான்.

நிலைதளர்ந் தவசமாகி நெட்டுயிர்ப் பெறிவோன் முன்னர்
மலையைவிட் டிரங்கியாடு மாடுமேய்ப் பவர்கள் போலக்

கலைமுடித் தவன் செய்கஞ்சிக் கலையங்கம் பளிச்சும்மாடு
தலைமிசை வைத்துமெள்ளத் தடியூன்றி வந்தானிப்பால. (23)

ஆறினை விட்டு நீங்கி யவனரு காகப் போயுன்
ஊறினை யுரைப்பா யென்ன வுயங்கினேன் பசியாலென்றான்
ஏறினை யுகைத் தோன்மைந்த னிறுங்கினல் வைத்தகஞ்சிச்
சோறினை யிட்டானுண்டு தொலைத்தனன் றீமை யெல்லாம். (24)

வருந்தினேன் பசிமயக்க மதுதெளிந் தெழுந்துகுந்தி
யிருந்தவன் வயற்நிரைந்து யேப்பமிட் டிப்பிணிக்கு
மருந்தளித் தவனேயாதி மகனெனநினைந்துபின்னுந்
தருந்திரு வனைத்துமென்று சாற்றிக்கொண் டில்லஞ்சென்றான்.

சென்றவன் மனைவிமக்கள் சிறந்தோர்கட் க்குறைத்துப்பின்னும்
மன்றலந் துளபமாயோன் மருகனை மனத்திலுன்னி
கன்றினைப் பிரிந்தகாராக் கருத்தினை வைத்தான்றீமை
சென்றது செல்வம்வந்து சேர்ந்தது கலக்கந்தீர்ந்தான். (26)

அரவணை தனிலே யோக வனந்தலான் மருகனை
சரவண பவனிரங்கித் தந்ததிச் செல்வமென்னு
முரமதாய் மீனமாச முத்திர நாளிலன்னம்
பரதேசி களுக்கென்னாளும் பகர்ந்து தன் சொந்தமான. (27)

பூதனந் தனிலோர்பாகம் புரோகிதன் மருகற்கென்றே
சாதன மாகச்செய்து தன்கையிற் கிடைத்ததுண்டி
மாதன நடையாள்வள்ளி மணவாளன் பதத்தையுன்னி
வாதனை யாவும்நீங்கி மனமகிழ்ந் திருக்கின்றானே. (28)

இத்தரைக் கலியுகத்தி லிவ்வண்ண மாகத்தான்றன்
பத்தரைக் கார்க்கவந்திப் பதலையி லமர்ந்தமுன்னாள்
அத்தரை நிறுத்திமூல மதையெடுத் துரைத்தவல்ல
சித்தரைத் தொழுதாவின்பஞ் சேர்வது திண்ணந்தானே. (29)

கட்டளைக்கலித்துறை.

சிந்தாகுலத்தை யறுத்துக்கிருபை செயவெனயான்
மந்திக்குருளை யெனப்பதம்போற்ற வகையறியேன்
கந்தாவுனது பதமலர்சேரக் கடைக்கணித்து
நந்தாவலவனைப் போற்கொண்டு வீட்டினைநல்குவையே. (30)

**சரித்திர சுருக்கமாலை முற்றும்**

125125
Q26:38:21193
H14

திருச்சிற்றம்பலம்.

## ஸ்ரீ பால தண்டாயுத பாணிபேரில்.

# பதிகம்

### எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

அணியலணி மணிமகுட நவமணிக ளடியரிரு
    ளகலவொளி வீசுமழகும்
அந்தமதி லந்தகர்கள் வந்துமெனை யுந்துபொழு
    தஞ்சலிசெய் கையினழகும்
துணிநிலவு நுதலிலணி பணிபவர்கள் பிணிவிலகு
    சோதிதரு பொட்டினழகும்
தோகையகர் ளாசைதனை ஏசியருள் மணவீசு
    சுபநீப மாலையழகும்
கணியாகி மலைவாரம் நிலையாகவே நின்ற
    கருதரிய காக்ஷியழகும்
கச்சையுஞ் செச்சையுஞ் சத்திவேல் சுத்தவொளி
    காட்டு கண்டிகையி னழகும்
மணியடிய னடையமன மினிமையுடனே சரணம்
    வளருமயில் தனிலேறியே
வடியயி லெடுத்தென்வினை பொடிபட விடுத்துலவு
    மண்கொண்ட மலை நாதனே. (1)

சுந்தனஞ் சிந்தகந் தென்னைகொய்யா விளவு
    சண்பக மிலந்தை நெல்லி
சம்பீர மாபலா வாத்திபனை நவலத்தி
    தாழைமுண் முருங்கை கொன்றை
முந்திரிகை வனமல்லி வெட்பாலை கமுகரசு
    முல்லையால் மருது வேங்கை
மூங்கி லாடாதொடை கருங்காலி யிலவெட்டி
    முதலா யனேக தருவும்
கந்துகம் பசுபன்றி கிரிமா னரியாடு
    கவரிமா வோந்தி யன்னங்

கருடன்முயல் குயில்கிள்ளை தும்பிவலி யன்புறு
கவுதாரி யாந்தை மயில்நாய்
மந்தமா விளையாடல் கண்டுமகிழ் வாகியே
வர்ணமயில் தனி லேரியே
வடியயி லெடுத்தென்வினை பொடிபட விடுத்துலவு
மண்கொண்ட மலை நாதனே. (2)

இந்தமண் கொண்டமலை வளர்தண்ட பாணிய
னிலங்கியருள் சந்நிதானத்
திசான்ய பாகமதி னேசமுடன் வேள்வாச
மெண்ணுதற் கறியதலமாங்
கந்தமலை தோகைமலை சோலைமழை பழநிமலை
கதிர்காம முடனேரகங்
கடம்பவன முதிர்சோலை யாவின் குடியாடல்
காக்ஷிபெரு செந்தில் முதலாம்
யெந்தமலை தன்னிலுங் காணுதர்க் கறியகுகை
யிதனுளே சித்தர் முத்தர்
யிருடியர்கள் பண்ணவர்க ளிரவினிற் சங்கவொலி
யென்றுமா ருமலேற்றி
வந்தனை செய்வது கண்டுசிந்தை யானந்தமுடன்
வளர்தோகை மயிலேறியே
வடியயி லெடுத்தென்வினை பொடிபட விடுத்துலவு
மண்கொண்ட மலை நாதனே. (3)

கங்கா தரர்க்குவகை பொங்கவறி பிரணவங்
கற்பித்த சுவாமிநாதா
கதிபொதிகை வதிமுனிவர் துதிகொண்டு திரவிடக்
கலைசொன்ன நேமிநாதா
அங்கமதி லாயிரங் கண்ணவனை நண்ணுகலி
யதமாக்கி யருளுநீதா
அதிமது ரகழைவில்லி மைத்துனு சமணர்கழு
வாக்கியொழி கமலபாதா

நங்கைமான் மகளாசை தங்கியே னற்சாரல்
நண்ணிவரு ரூபபேதா
நத்தியுன் மத்தனுன் கத்தியே நித்தமுனே
நாடுமடியன் மேல்வாதா
வங்கைவைத் துன்மனது மங்காமல் நிர்த்தன
மாடுமயில் தனிலேறியே
வடியயி லெடுத்தென்வினே பொடிபட விடுத்துலவு
மண்கொண்ட மலே நாதனே. (4)

அரிமருக முருகமலே யரசமயி லூர்திவே
ளரன்மகன் சுப்ரமண்யன்
அறுமுக விசாககுக குன்றெறிந் தோய்தந்தை
யாசான் சுரேச குழகன்
கரிமுகன் றம்பிசேவற் கொடியன் வேலிறை
கடம்பனறு மீன்காதலன்
கந்தாசிலம்ப சரவணபவா சண்முகா
கார்த்திகேயன் செவேள் சங்
கரிகுமர சூர்ப்பகைவ வள்ளிதெய்வானே பதி
கலேபுலவ சாமிதாரு
காரிவா குவலேயன் சேந்த பன்னிருதோள
கடவுள் சேனு பதியென
மாரிவரை மனமொன்றி நினேபவர்க் கருள்புரிய
வர்ணமயில் தனிலேறியே
வடியயி லெடுத்தென்வினே பொடிபட விடுத்துலவு
மண்கொண்ட மலே நாதனே. (5)

சந்ததமு வந்துசிவ சரவணபவா வென்று
சாற்றிமல ரடியடையவென்
சடலமது மட்கலங் குமிழியது வுள்ள
நாட்டவராது பூசை செய்யச்
சிந்தையது பலவிதத் தொந்தமது வாகுமென்
செய்கையது வெகு விநோதஞ்

செப்புவது பலகோடி தப்பிதமி தற்கென்ன
செய்வேனி யாரை நோவேன்
பந்தனைய மூலமாதர் நிந்தை வலையிற்சிக்கி
பஞ்சென்ன நெஞ்சுலர்ந்து
பாழான நரகத்துள் வீழாமல் யேழைமேற்
பக்ஷமு மிரக்கமுடனே
வந்துகல கலெனவொலி சிந்தநிலம் வலம்வந்த
வர்ணமயில் தனிலேறியே
வடியயி லெடுத்தென்வினை பொடிபட விடுத்துலவு
மண்கொண்ட மலை நாதனே. (6

உனதடியரருணகிரி நாதராது குட்டனை யோட்டி
விட்டது கண்டனம்
உலகதனி லிலகுதமிழ் முனிவருறு துக்கமதை
யோட்டிவிட்டது கண்டனம்
தனதுவுயிர் காக்கவே படைசொன்ன கீரர்வினை
தன்னை நீத்தது கண்டனம்
தஞ்சமெ‍ென வஞ்சியடி கெஞ்சியவி னோர்சிறை
தவிர்த்துவிட்டது கண்டனம்
கனதுயர முளமாது புருஷனால் வெட்டுண்ட
கைவளர்ந்தது கண்டனம்
காமதேன் றிருமாது பூமாது பூசித்துக்காக்ஷி
பெற்றது கண்டனம்
மனநிலைகலங்க வசுமதி மலைகுலுங்க நடமாடு
மயில்தனி லேறியே
வடியயி லெடுத்தென்வினை பொடிபட விடுத்துலவு
மண்கொண்டமலைநாதனே. (7)

கலிகால மிகுகொடுமை வெகுகடுமை சொல்லொணுக்
கபடமுஞ் சூதும்வாதும்
கனவாதை ரணவாதை மனவாதை யாகிவெகு
கஷ்டமதிலே யுழன்று
மெலிவாகி யுனதடிமை புடமிமிசை சொல்லவும்
வேலவா வுற்றதுணைவன்

வேறின்றி நீரினுரை வண்டெனப் போக்கின்றி
வேதனைக் களாகினேன்
நலியாது பகைவரா லழியாது சுகபோக
நண்ணாநிலை யானகருணை
நாட்டம் வைத்தீறின்பவீ ட்டையுமெனக்
கருள்செய்யான்செய்த பாவரூப
வலியதனை யோட்டியே ரஞ்சிதப் பிரதாப
மானமயில் தனிலேறியே
வடியயிலெடுத் தென்வினை பொடிபட விடுத்துலவு
மண்கொண்ட மலைநாதனே. (8)

தண்டையொடு கிண்கிணி சதங்கை கலகலென
வொலிதருக குகவருகவருக
சல்லடங் கச்சை கைவல்லயஞ் சானுவைகள்
சலசலென வருகவருக
எண்டிசையு மொளிவீசு குண்டலங் கண்டிகையி
லங்கவே வருகவருக
இரத்தினச் சுட்டியணி மணிமாலை யிளவெயி
லெரிக்கவே வருகவருக
அண்டரண்டந் துதிசெய் தண்டாயுதங் கையி
லசையவே வருகவருக
அடியவர்கள் மிடிதீர லங்கோடு சிங்கார
மாகமுனம் வருகவருக
மண்டலங்கடக டெனமத கரிகள் தடதடென
மருளவரு மயிலேறியே
வடியயி லெடுத்தென்வினை பொடிபட விடுத்துலவு
மண்கொண்ட மலைநாதனே. (9)

கருமவினை யதுபெருகி யுருகிமன முடல்கருகு
கடையனெதிர் வருகவருக
கண்பஞ்சடைந்து மழை காணாத பயிரான
காமிமுனம் வருகவருக

சருமமுநரம் பென்புதளர் வாகியுனை நாடு
தமியன்மூன் வருகவருக
சஞ்சலத்தா லஞ்சி நெஞ்சமது புண்ணுன
சமையமிது வருகவருக
தருமமல வுனையன்றி வேறுகதி யாருமிலே
சாற்றினேன் வருகவருக
தற்பரம புத்திரா நிற்பதந் தந்தாளு
தருணமிது வருகவருக
மருமமதில் வருமமதை பெண்ணுது நிர்த்தன
மாடுமயில் தனிலேறியே
வடிபயிலெடுத் தென்வினை பொடிபட விடுத்துலவு
மண்கொண்ட மலைநாதனே. (10)

பஞ்சவர்ணத் துகிலணிந்து நினதடியவன்
படுதுயர்கள் தீரவாவா
பரவுதுயரக்கடலில் வீழ்ந்து கதிவேறிலாப்
பாவிகண் காணவாவா
அஞ்சலெனவந்துனது கஞ்சபத மலரடிகள்
அண்டினேனுள வாவா
அப்பனே யென்னவிததப்பித மிருந்தாலு
மது பொருத்தாள வாவா
தஞ்சமென வந்தடியர் தள்ளாது கொள்ளவே
தகதகென விருசிறைவிரித்
தளங்குதக தத்திமிதிமிச்சதக தரிகிடத்தாமென
வெழுந்து சுற்றி
மஞ்சுகண்டானந்த மிஞ்சியே நிர்த்தன
மாடு மயில்தனிலேரியே
வடிபயிலெடுத் தென்வினை பொடிபட
விடுத்துலவு மண்கொண்டமலைநாதனே. (11)

ஸ்ரீபாலதண்டாயுதபாணி மாலையும், பதிகமும்
முடிந்தது.

175125